22.02.2017

தினமணி

# "கடல் பசுக்களை பாதுகாப்பதில் மீனவர்களின் பங்களிப்பு அவசியமானது'



அரிதாகி வரும் கடல் பசுக்களையும், அவற்றுக்கான வாழ்வியல் சூழலை மேம்படுத்துவதிலும் மீனவர்களின் பங்களிப்பு அவசியமானது என நாகை மாவட்ட வன உயிரின காப்பாளர் சி. வித்யா கூறினார். தமிழ்நாடு வனத்துறை சார்பில் நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரை வெளிமான் இல்ல பயிற்சி கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற, கடல் பசுக்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கத்துக்குத் தலைமை வகித்த அவர் மேலும் பேசியது :

கடலில் வாழும் அரிய வகை உயிரினங்களில் பாலூட்டி இனமான கடல் பசுக்களை பாதுகாப்பதில் மீனவர்களின் பங்களிப்பு அவசியமானது. அவைகளுக்கான வாழ்விடங்கள், சூழல்களை பாதுகாப்பதிலும் மீனவர்களுக்கு பெரும் பங்கு உள்ளது.

எனவே தான் மீனவர்கள் உள்ளிட்ட கடல், கடலோரம் சார்ந்த பணிகளில் ஈடுபடும் துறையினருக்கு கடல் பசுக்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது என்றார் வித்யா.

நாகை மீன்வள பல்கலை. உதவி பேராசியர் ஆனந்த்: நிலத்தில் வாழும் யானைகளைப் போல தோற்றமளிக்கும் கடல் பசுக்கள் தாவர உண்ணி உயிரினமாகும். 2015-இல் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரத்தில், கல்பாக்கம் உள்ளிட்ட தமிழகத்தைச் சார்ந்த கடல் பரப்பில் சுமார் 158 கடல் பசுக்களை கண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் மீன்பிடி படகுள், ரசாயனப் பயன்பாடுகள் போன்றவைகளால் அந்த உயிரினம் வாழும் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஓம்கார் அறக்கட்டளை இயக்குநர் டாக்டர் வி. பாலாஜி: கடல் பசுக்கள் தனது குட்டிகளை பராமரிப்பதில் மனிதர்களைப் போலவே அன்பு செலுத்துபவை. இதன் ஆயுள் வயது சுமார் 70 ஆண்டுகளாக உள்ளது. இந்தியாவில் கடல் பசுக்களின் எண்ணிக்கை 250 எனக் கூறப்படுகிறது. இவை கடலில் காணப்படும் 14 வகையான தாழை தாவரங்களை உணவாக உண்ணுகின்றன. இந்த தாவரங்கள் மீன்பிடி சாதனங்கள், பருவம் தவறிய மழை போன்றவைகளால்

பாதிக்கப்படுவதால், கடல் பசுக்களின் வாழ்வியல் சூழலும் பாதிக்கப்படுகிறது என்றார்.

மும்பை இயற்கை வரலாற்றுக் கழகத்தின் பறவையியல் விஞ்ஞானி டாக்டர் பாலசந்திரன்: தமிழக கடல் பரப்பில் பரவலாக காணப்பட்ட இந்த பசுக்கள், 1994-களுக்குப் பிறகு தொண்டி - ராமேஸ்வரம் கடல் பரப்பில் காணப்பட்டதாக பதிவுகள் உள்ளன. அதன் பிறகு அவை படிப்படியாக அரிதாகி விட்டன. தற்போதய சூழலில் அவற்றின் எண்ணிக்கை மிக மிக குறைவானதாகவே இருக்க வாய்ப்புள்ளது என்றார்.

கருத்தரங்கில், கால்நடை அரசு மருத்துவர் மீனாட்சிசுந்தரம், வனச்சரக அலுவலர்கள் அயூப்கான், கோபிநாத், வனவர் இளங்கோவன் மற்றும் கடலோரக் காவல்துறையினர், வனத்துறையினர், மீனவர்கள், சூழல் மேம்பாட்டு மகளிர் குழுவினர் பங்கேற்றனர்.

**ஏக்கருக்கு 10 டன் தர்ப்பூசணி விளைச்சல்: வறட்சியிலும் லாபம் ஈட்டும் விவசாயி**



திருவண்ணாமலை மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வரும் நிலையில், ஏக்கருக்கு 10 டன் தர்ப்பூசணி விளைவித்து, அதன் மூலம் சுமார் ரூ.75 ஆயிரம் வரை விவசாயி லாபம் சம்பாதித்து வருகிறார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருவதால், நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் கருகிவிட்டன. எனவே, வறட்சியால் காய்ந்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரி, விவசாயிகள் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் துரிஞ்சாபுரம் ஒன்றியம், வெளுகனந்தல் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி வி.ஆர்.டி.ஏழுமலை, தனக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலத்தில் வறட்சியைத் தாங்கி, செழித்து வளரக்கூடிய தர்ப்பூசணியை பயிரிட்டுள்ளார்.
10 ஏக்கர் முழுவதும் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து, தினமும் 4 மணி நேரம் மட்டும் தண்ணீர் பாய்ச்சுகிறார்.

தர்ப்பூசணி விதை நட்ட 55 முதல் 60 நாள்களில் முதல் அறுவடை நடைபெறுகிறது. 70-ஆவது நாளில் 2-ஆவது அறுவடை நடைபெறுகிறது. இதன் மூலம் குறைந்த தண்ணீரை பயன்படுத்தி நிறைந்த லாபம் பெற்று வருவதாகக் கூறுகிறார் விவசாயி ஏழுமலை.

அருகிலுள்ள விவசாய நிலங்களில் எல்லாம் கிணற்றில் போதிய தண்ணீர் இல்லாததால் பயிர்கள் காய்ந்து விட்ட நிலையில், நீங்கள் மட்டும் திறம்பட தர்ப்பூசணி சாகுபடி செய்தது எப்படி என்று விவசாயி வி.ஆர்.டி.ஏழுமலையிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:

நான் கடந்த 10 ஆண்டுகளாக நெல், வாழை, கரும்பு மற்றும் இதர பயிர்களை பயிரிட்டுப் பார்த்துவிட்டேன். எந்தப் பயிரிலும் போதிய லாபம் கிடைக்கவில்லை. தண்ணீரும் போதுமானதாக இல்லை.

தற்போது என்னுடைய கிணற்றில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி நெல் பயிரிட விரும்பினால், ஒரு ஏக்கரில் மட்டுமே நெல் பயிரிட முடியும். மணிலா பயிரிட விரும்பினால், 2 ஏக்கரில் பயிரிடலாம். ஆனால், தற்போது 10 ஏக்கரில் தர்ப்பூசணி பயிரிட்டுள்ளேன். 10 ஏக்கரிலும் பகுதி, பகுதியாக தர்ப்பூசணி நட்டு பராமரித்து வருகிறேன்.

சில தினங்களுக்கு முன்பு மூன்றரை ஏக்கரில் பயிரிட்டிருந்த தர்ப்பூசணியை அறுவடை செய்தேன். 35 டன் தர்ப்பூசணி விளைந்தது. ஒரு டன் ரூ.9,100-க்கு விற்பனை செய்தேன். இதன் மூலம் மொத்தம் ரூ.3 லட்சத்து 18 ஆயிரத்து 500 கிடைத்தது. உரம், ஆள்களுக்கான கூலி, உழவு, மருந்து என மொத்தம் ரூ.75 ஆயிரம் செலவானது.

செலவு போக மீதி ரூ.2 லட்சத்து 43 ஆயிரம் நிகர லாபம் 70 நாள்களில் கிடைத்துள்ளது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. என்னைத் தொடர்பு கொள்ளும் விவசாயிகளுக்கு தர்ப்பூசணி பயிரிடத் தேவையான ஆலோசனைகள், சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறேன் என்றார்.

**கால்நடை தீவனப் பிரச்னை சமாளிக்க அகத்தி வளர்ப்பு ஊக்குவிப்பு: மாவட்ட ஆட்சியர் தகவல்**



கால்நடை தீவனப் பற்றாக்குறையை சமாளிக்க அனைத்து பருவத்திலும் வளரும் அகத்தி மர வளர்ப்பு ஊக்குவிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி தெரிவித்தார்.

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சி ராக்கியாபட்டியில், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அகத்தி மரக் கன்றுகளை, பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஆட்சியர் ச.ஜெயந்தி செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

மரக்கன்றுகளை வழங்கி அவர் பேசியது: பொதுமக்கள் மற்றும் கால்நடைகளுக்கு தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கால்நடைகள் விரும்பி

உண்ணும் மர இலை தீவனங்களை வளர்க்கும் பொருட்டு, அகத்தி மரக் கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. ஊராட்சிகளில் உள்ள பொது இடங்கள், பள்ளிகள், கால்நடை மருந்தக வளாகங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களில் இந்த மரக்கன்றுகளை நட்டு அதன் மூலம் கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் உபயோகப்படுத்தும் விதமாக ஆணை பெறப்பட்டுள்ளது. அகத்தி மரம் ஆண்டின் எல்லா பருவத்திலும் வளரக்கூடியது.

அகத்தி மரக்கன்று நடப்பட்ட 8 மாதங்களிலிருந்து அறுவடை செய்து பயன்படுத்தலாம். அதன் பின்பும் ஒவ்வொரு 60, 70 நாள்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யலாம். ஆண்டுக்கு ஹெக்டேருக்கு 90 முதல் 100 டன் மகசூல் தரக்கூடியது. திருப்பூர் மாவட்டத்துக்கு 54,480 அகத்தி மரக் கன்றுகள் பெறப்பட்டு, அதனை மாவட்டத்திலுள்ள அனைத்து கால்நடை மருந்தகங்களுக்கும் அனுப்பபட்டுள்ளது. உடுமலை, அமராவதி வனச்சரகப் பகுதிகளில் உள்ள தளிஞ்சி, கோடந்தூர், கரட்டுப்பதி, ஈசல்தட்டு ஆகிய மலைவாழ் மக்களின் குடியிருப்புகளில் நடுவதற்கு வனத் துறை மூலமாக 1,000 அகத்தி மரக்கன்றுகள் வழங்கப்பட்டு பராமரிக்கப்பட உள்ளது. மரக்கன்றுகளை பெற்று கால்நடைகளை நல்ல முறையில் வளர்த்து வருவாயை உயர்த்திக் கொள்ளலாம் என்றார்.

தொடர்ந்து, ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சியில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற 112 பயனாளிகளுக்கு அகத்தி மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. முன்னதாக, ஈட்டிவீரம்பாளையம், ராக்கியாபட்டி சமுதாய நலக் கூடம் அருகில் அகத்தி மரக் கன்றை மாவட்ட ஆட்சியர் நட்டு வைத்தார். இதைத் தொடர்ந்து. ஊராட்சி பகுதிகளில் சீமைக்கருவேல

மரங்கள் அகற்றும் பணியினையும் ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின்போது, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) அ.முருகன், கோட்ட உதவி இயக்குநர் அ.மகேந்திரன், கால்நடை மருத்துவர் கே.என்.ஆறுமுகம், அவிநாசி வட்டாட்சியர் அருணா, கால்நடை உதவி மருத்துவர்கள், திருப்பூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.